# தற்கொலைத் தாக்குதலிலிருந்து 'ஜெரி' தப்பினர்!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 4 இதழ் 318
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 19-12-1994

(கொழும்பு)
இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா, விடுதலைப் புலிகளின் தற்கொலை தாக்குதலிலிருந்து கடந்த மாதம் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாகச் 'சண்டே லீடர்' பத்திரிகை தெரிவித்துள்ளதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.
(4-ம் பக்கம் பார்க்க)

## ரூபா 200 கோடியால்

### பாதுகாப்புச் செலவு !அதிகரிப்பு

(கொழும்பு)
1995ம் ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவுக்கென 2700 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளதாக பிரதி நிதியமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு வரி அறவீட்டுச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போது அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு
(4-ம் பக்கம் பார்க்க)

## மேலும் 70 பேருக்கு மருத்துவ பீட அனுமதி

(கொழும்பு)
1993/94 கல்வியாண்டில் மேலும் 70 பேருக்கு பல்கலைக்கழகங்களில் மருத்துவ பீடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இதன் அடிப்படையில் பல் மருத்துவத்துறைக்கு தெரி
(4ம் பக்கம் பார்க்க)

★ இரண்டாம் கட்ட

# அரசு - புலிகள் பேச்சுக்கான திகதி இன்று தீர்மானிக்கப்படும்

## அரசு அதிகாரிகள் தெரிவிப்பு

[கொழும்பு]
விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான இரண்டாம்கட்ட பேச்சுக்கான திகதி இன்று தீர்மானிக்கப்படவுள்ளதாக அரசு அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர். எனினும் இப் பேச்சுக்கள் பெரும்பாலும் இவ்வாரம் ஆரம்பமாகுமென எதிர்பார்க்கப்படுவதாக அரசு தரப்பு பிரதிநிதிகளில் ஒருவரான திரு. ராஜன் ஆசீர்வாதம் பி. பி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

காமினியின் படுகொலையையடுத்து ஒத்திவைக்கப்பட்ட இப் பேச்சுசகள் 21ம் திகதி புதன்கிழமை மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் என முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும் அரசு தரப்பு பிரதிநிதி ஒருவர் சுகயீனமடைந்திருப்பதால் பேச்சுக்களில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது,
(4ம் பக்கம் பார்க்க)

## நத்தாருக்கு முன் மீண்டும் பேச்சுக்கள்

(கொழும்பு)
அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் பெரும்பாலும் 'நத்தார்' தினத்திற்கு முன்னர் மீண்டும் ஆரம்பமாகுமென பி. பி. ஸி. தெரிவித்தது.
பி. பி. ஸி. மேலும் கூறுகையில்: அரசுப்பிரதிநிதிகளில் ஒருவரான ராஜன் ஆசீர்வாதம், அரசுப் பிரதிநிதிகள் இந்த வாரம் யாழ்ப்பாணம் செல்லக்கூடும் எனத் தெரிவித்துள்ளார்.
எனவே நத்தாருக்குள் அமைதி ஏற்படாவிடினும்பேச்சுக்களாவது ஆரம்பமாகுமெனவும் பி. பி. ஸி. குறிப்பிட்டது.
-சி

## சமாதான பேச்சுக்களை குழப்ப படையினர் முயலக்கூடும்

(கொழும்பு)
அரசுக்கும் விடுதலைப் புலிகளுககுமிடையிலான சமாதானப் பேச்சை குழப்ப படையினர் முயலக்கூடுமென கருதப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்துள்ளன.
அரசும் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து நடாத்தும் காலத்தில் இதனை குழப்பும் விதத்தில் படையினர் தாக்குதல்களை நடாத்தக்கூடுமென அரசு
(4-ம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கள் குழம்பும் சாத்தியம் குறைவு

(கொழும்பு)
அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் குழம்புவதற்கு வாய்ப்புக்கள் குறைவாகவே இருப்பதாக பி.பி.ஸி. கொழும்பு நிருபர் பி.பி.ஸி. தெற்காசியச் சேவைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.
அதில் அவர் மேலும் கூறுகையில்: இரு தரப்பும் கடந்த சில வாரங்களாக பல செய்தி
(2ம் பக்கம் பார்க்க)

இலங்கையில்

## முதலீடுகள் செய்வது பற்றி அமெரிக்கா மறுபரிசீலனை?

(கொழும்பு)
இலங்கையில் முதலீடு செய்வது குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுமென அமெரிக்கா இலங்கைக்கு எச்சரித்துள்ளது.
'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' தொடர்பாக ஐ. தே. க. அரசுடன் அமெரிக்கா முன்னர் செய்த ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்யப் போவதாக பொ. ச. மு அரசு அறிவித்துள்ளதையடுத்தே அமெரிக்கா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.
(4-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளை மாளிகை மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு

(நியூயோர்க்)
அமெரிக்க அதிபர் பில் கிளிரங்ன் வாசம் செய்யும் வெள்ளைமாளிகையை நோக்கி பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
வெள்ளை மாளிகையின் சமையல் பகுதியூடாக மேற்கொள்ளப்பட்ட மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தின் போது ஜனதிபதி கிளிங்ரனோ அவரது குடும்பத்தைச் சேர்ந்த எவருமோ காயமடையவில்லை. அவ்வேளையில் பில்கிளிங்ரன் குடும்பத்தினர் சயன அறையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இதுதொடர்பாக அமெரிக்க பத்திரிகை ஒன்று தெரிவிக்கையில்; அதிபர் பில்
(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க அதிகாரி சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி சந்திரிகாவுடன் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக பெண் அதிகாரி ஒருவர் சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.
'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வானொலி நிலையம் அமைப்பது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலை குறித்தும் பழைய ஒப்பந்தத்தை இலங்கை அரசு
(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு மக்கள் முன் தனது தீர்வை முன்வைக்க வேண்டும்

(லண்டன்)
தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் இருக்கும் இனக்குரோதங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தனது யோசனைகளைத் தாமதியாது மக்கள் முன் வைக்கவேண்டும் என்று அரச சார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த யோசனைகளில் தெரிவித்துள்ளன.
இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு அண்மையில் கொழும்
[4ம் பக்கம் பார்க்க]

## ஆணையாளர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா, ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் வடக்கு-கிழக்கு மாகாண அரசின் கல்வி அமைச்சுச் செயலாளராகவும், உள்துறை அமைச்சுப் பிரதிச் செயலாளராகவும் மாற்றம் பெற்றுள்ளார்.

உள்ளூராட்சித் திணைக்களம் பிரதேசச் செயலர்கள் மட்டத்தில் நிர்வாகம் பரவலாக்கப்பட்டதைத் தொடர்ந்து, திரு. சுந்தரம் டிவகலாலா மேற்படி திணைக்களங்களுக்குப் பொது நிர்வாக அமைச்சினுல் மாற்றப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. -162

இன்றைய சூழ்நிலையில்

## சித்த வைத்தியத்தை பேணி பாதுகாக்கவேண்டும்

(பண்டத்தரிப்பு)

''தமிழ் மக்களின் தனித்துவம் மிக்க மருத்துவ கலையான சித்த வைத்தியத்தை நாம் இன்றைய சூழ்நிலையில் பேணிப்பாதுகாத்து வளர்க்க வேண்டியது அவசியமானது ஒன்ருகும். எமது பிரதேசத்திலுள்ள மூலிகைகளின் சிறப்புகள், மருத்துவ குணங்கள் என்பன விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுவருவதை சஞ்சிகைகள் பலவற்றின் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில் இத்துறையில் நாம் அனைவரும் தீவிர கவனம் செலுத்தி சித்த வைத்திய அபிவிருத்திக்காக பாடுபட வேண்டும்''.

இவ்வாறு யாழ், சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற சித்தவைத்திய மருந்தாளர் இறுதித் தேர்வில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் வடமாநில பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு ஆக்கஉதவி ஆணையாளரும், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கத் தலைவருமான திரு. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

சித்திவைத்திய ஆராய்ச்சி நிலையத் தலைவர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு; சபாரத்தினம் தொடர்ந்து உரையாற்றுகையில் இங்கு பயிற்சி பெற்ற மருந்தாளர்கள் தமது கல்வியின் பயன் சமுதாயத்திற்கு கிடைக்கக் கூடிய முறையிலும் சித்த வைத்தியத்தை மக்கள் மத்தியில் விருத்தி செய்வதிலும் சிறந்த முறையில் சேவையாற்றவேண்டும் என்று குறிப்பிட்டார். 72

## செப்ரிசிமியாவின் பாதிப்பு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

செப்ரிசீமியா நோயினுல் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. யாழ்.போதனு வைத்தியசாலையில் மட்டும் இந்நோயினுல் கடந்த மாதத்தில் 13பேர் மரணமடைந்துள்ளனர்.

இந்நோயினுல் அதிகமாக குழந்தைகளே பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது;

செப்ரிசிமியா மற்றும் பல நோய்கள் காரணமாக யாழ். போதனு வைத்தியசாலையில் 101 பேர் அண்மையில் உயிரிழந்தனர்.

இதேவேளை கடந்தமாதத்தில் 26,639 பேர் யாழ். போதனு வைத்தியசாலை வெளியோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளதாக ஆஸ்பத்திரி புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

5,276 பேர் வரை வார்ட்டுகளில் தங்கி சிகிச்சை பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ரி

### திருட்டு

(நெல்லியடி)

நள்ளிரவு வேளை வீட்டு மதிலால் ஏறி உட்புகுந்த திருடர் கோஷ்டி வீட்டு விருந்தையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான மூன்று சைக்கிள்களை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு புலோலி தெற்கு உபயகதிர்காமம் என்னும் இடத்திலுள்ள பி. கிருஷ்ணபிள்ளை என்பவரது வீட்டில் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக பருத்தித்துறை தமிழீழ காவல் பணிமனையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (162)

### கால்நடை அபிவிருத்தி இயல்பு நிலைக்கு

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் கட்ட ஈழப் போரினுல் பாதிக்கப்பட்டிருந்த கால்நடை அபிவிருத்து தற்போது இயல்பு நிலைக்கு மாறிக் கொண்டிருப்பது மாதாந்த செயற்கைமுறை சினைப்படுத்தும் சேவை அறிக்கையின் மூலம் காணக் கூடியதாக உள்ளதென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின்மூலம் தெரிவிக்கின்றது.

கடந்த ஐப்பசி மாதத்தில் 405 ஆடுகளுக்கும், 529 மாடுகளுக்கும் செயற்கை முறை மூலம சினைப்படுத்தப்பட்டுள்ளது.

செயற்கை முறை சினைப்படுத்தல்மூலம் நல்லின அபிவிருத்தியினையும், குறைந்த செலவையும் நோய்ப்பரம்பல் தடுப்பையும் ஏற்படுத்துவதால் இச்சேவை மேலும் விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுனம் மேற்கொண்டு வருவதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

### பேச்சுக்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களை தமக்கிடையே பரிமாறியுள்ளனர். இதன் மூலம் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான வழிகள் ஏற்பட்டுள்ளது. பேச்சுக்கள் சுமுகமாக அமைவதற்காக கடிதப் பரிமாற்றங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டபேச்சுக்கான விடயங்கள் குறித்து இந்த கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (சி)


வலிகாமம் தெற்கு பிரதேச சபை

(சுன்ஞகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்கள்)

## சகல வரியிறுப்பாளர்களுக்கும்

1987ஆம் ஆண்டின் 15வது இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 41வதுபிரிவின் கீழ் 1995ஆம் ஆண்டிற்கான

## ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1995ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின் படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர் வரும் ஆண்டிற்கும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31ம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும், 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31ஆம். ஏப்ரல் 30 ஆம், ஜூலை 31ஆம். அக்டோபர் 31ஆம், திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும். 1ஆம் கந்தாய வரி மார்ச் 31ஆம் திகதிக்கு முன்பும், 2ஆம் கந்தாய வரி ஜுன் 30ஆம் திகதிக்கு முன்பும், 3ஆம் கந்தாயவரி செப்டெம்பர் 30ஆம் திகதிக்கு முன்பும் 4ஆம் கந்தாயவரி டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்சள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15% உம், வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20% உம் பற்ருணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைகுமாறு பணிவன்புடன் வேண்டப்படுகின்ருர்கள்.

மேலும் 1994ஆம் ஆண்டு முடிய மின்சார வரி நிலுவைகளையும், வியாபார உரிமக் கட்டணங்கள் மற்றும் வண்டி, துவிச்சக்கரவண்டி வரி என்பனவற்றையும் நிலுவையின்றி செலுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன்,

1995ஆம் ஆண்டுக்குரிய வண்டி, துவிச்சக்கர வண்டி வரிகள் வருட ஆரம்பத்தில் வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்ஞகம், 14-12-94. (எ-4594)


க. பொ. த. [சா/த]

## புள்ளியிடும் பணி 23ம் திகதி ஆரம்பம்

(உடுவில்)

அண்மையில் நடைபெற்ற க.பொ.த. (சாதாரணம்) பரீட்சை விடைத் தாள்களுக்குப் புள்ளியிடும் பணி, எதிர் வரும் 23ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது.

புள்ளியிடும் பணியில் பங்குபற்றும் பிரதம பரீட்சகர், கட்டுப்பாட்டாளர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம், இன்று கொழும்பு ரேயல் கல்லூரியில் நடைபெற உள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். 109-சி

## வீடமைப்பு கடன் நிலுவை அறவீடு

(உடுவில்)

வீடமைப்புக் கடன் பெற்றவர்களிடமிருந்து, கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு, வீடமைப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துவருகின்றது,

வீடமைப்புக் கடன் பெற்று இதுவரை கடனைச் செலுத்தாதவர்கள், கடன் நிலுவைப் பணத்தைச் செலுத்திக் கடன் ஒப்பந்தத்தைப் பூர்த்திசெய்து கொள்ளுமாறும், கடன் சம்பந்தமான காணி உறுதிகளை மீளப் பெற்றுக்கொள்ளுமாறும் அதிகார சபையினர் கடனைப் பெற்றுக்கொண்டவர்களுக்குக் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர். 109-சி

## பாடசாலை நாட்காட்டி அனுப்பி வைப்பு

(உடுவில்)

வலயம், மாவட்டம் மட்டங்களில் 1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள பாடசாலை நிகழ்சிகள் சம்பந்தமான நாட்காட்டியினை யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி, பாடசாலை அதிபர்களிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

வருடம் முழுவதும் மாதந்தோறும் நடத்த உத்தேசித்துள்ள நிகழ்ச்சிகள் பற்றி நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது;

இந் நாட்காட்டி நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைமட்ட நாட்காட்டியை தயாரிக்குமாறு கல்விப் பணிப்பாளர் பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். 109

## வாழைக்குலை, மரவள்ளி திருட்டு அதிகரிப்பு

(உடுவில்)

வாழைக்குலை, மரவள்ளிக் கிழங்கு போன்றவற்றைத் தோட்டங்களில் இருந்து திருடும் முயற்சிகள் உடுவில், இணுவில், உரும்பராய் போன்ற தோட்டங்களில் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றை விற்பனை செய்வதற்காக அன்றி தமது உணவுப் பாவனைக்காகவே திருடப்படுவதாகவும் அறியப்படுகிறது,

உடுவில், உரும்பராய் போன்ற இடங்களில் உள்ள வாழைத தோட்டங்களில் வாழைக்குலைகள் அடிக்கடி திருடப்படுவதாக புகார் செய்யப்படுகின்றது. தோட்டங்களில் வாழைக்குலைகள் இரவு நேரத்தில் திருடப்படுகின்றனவாம்

உடுவில் கிழக்கிலுள்ள தோட்டமொன்றில் மரவள்ளிக் கிழங்குகளைப் பிடுங்கி எடுத்தபின்னர் திருடர்கள் மரத்தினை மீண்டும் நிலத்தில் ஊன்றிச் சென்றதாகவும் தெரிவுக்கப்படுகிறது. (109இ)

## மாணவர் சீருடை மார்ச் மாதம் கிடைக்கும்

(உடுவில்)

1995 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கல் மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ளது.

சீருடை வழங்குவதற்கான ஆயத்தங்களை செய்துகொள்ளுமாறு உடுவில் பிரதேச பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்.

சீருடைகள் சீரான முறையில் வழங்கப்படுவதற்கு சரியான தரவுகளை திரட்ட வேண்டி உள்ளதாகவும், அதிபர்கள் சரியான கணக்கெடுப்பினை மேற்கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு 1995-ம் ஆண்டு முதலாம் ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கும் மாணவர் தொகையை உத்தேசித்துச் சேர்த்துக் கொள்ளுமாறும் 1995ஆவணி மாதத்தில் இரண்டாம் முறை பரீட்சை எடுக்கும் மாணவர்களையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளவேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

1994 ஆம் ஆண்டு சீருடை வழங்கல் தொடர்பாக:-

சீருடை வழங்கியமைக்கான பதிவேடுகளை சரிமான முறையில் பேணவேண்டும்.

காற்சட்டை. சேட் துணிகள் சமமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (109-இ)

### மணிவாக்கு

முறையறிந்துகீழ்படுகிறவன் தன்னையும் மேன்மைப்படுத்துகிறுன். தனக்கு ஆணையிட்டவரையும் மேன்மைப்படுத்துகிறுன்.

- சிற்பரானந்தர்

## நமது நோக்கு

### சத்துணவை பெற்றிடவே

ஒசாமு புநியா ஜப்பானில் 21 ஆண்டுகளாக ஆசிரியராக இருந்தவர். இன்று பெரிய செல்வந்தராகிவிட்டார் எப்படி?

டோக்கியோவில் சிறிலங்கா உணவகம் ஒன்றை ஆரம்பித்தார். ஜப்பானியர் உண்ணும் வெள்ளை அரிசியில் சத்துக்குறைவு, சிறிலங்காவிலிருந்து கிடைக்கும் தவிட்டோடு சேர்ந்த குத்தரிசியில் சத்துக்கள் அதிகம் என்று விளம்பரம் செய்தார்.

இரசாயனப் பொருட்களால் தயாரிக்கப்படும் செயற்கைச் சுவையூட்டிகளால் ஆபத்து அதிகம். சிறிலங்காவிலிருந்து கிடைக்கும் இயற்கை வாசனைத்திரவியங்களான கறுவா, ஏலம், கராம்பு போன்றவை தீங்கற்றவை மருத்துவக்குணம் கொண்டவை என்று பிரசாரம் செய்தார்.

புரியாணி, வத்தலப்பம் கொத்துரொட்டி என்றெல்லாம் இங்குள்ள உணவு வகைகளை அறிமுகம் செய்தார். விளைவு? மேலும் மூன்று கிளைகள் ஆரம்பிக்க வேண்டியளவிற்கு வியாபாரம் பெருகிவிட்டது.

இங்கு நாம் என்ன செய்ருேம்? வெள்ளையரிசிக்கு ஏங்கிருேம். சத்து மிகுந்த தவிட்டை நீக்கிவிடுகிருேம்.

நிறைந்த சத்துக்கள் மிகுந்த சிறுதானியங்களான சாமை, தினை, குரக்கன் போன்றவை பற்றிக் கருத்தரங்குகள் பொருட்காட்சிகள் மூலம் விளக்கம் தந்தும் அவற்றின் பாவனையைப் பூரணமாக ஏற்கத்தயங்குகிருேம்.

இறக்குமதி மாவிற்கு நாம் காட்டும் கரிசனையில் ஒரு சிறிதாகினும் நமது பகுதியில் விளையக்கூடிய உணவுகளுக்குக் காட்ட வேண்டாமோ?

போஷாக்கின்மையால் நோயாளிகள் தொகை அதிகரித்து வரும் அவலமே இங்கு காணப்படுகிறது.

நோயினுல் நலிந்த பின் என்ன நடக்கிறது? நலிந்தோர்க்கு நல்லுணவு', என்று விளம்பரம் செய்யப்பட்டு போத்தல்களில் அடைத்து வரும் உணவுப் பொருள்களுக்குப் பணத்தை வாரி இறைக்கிருேம்.

எளிதாக அதிக செலவின்றி இயற்கையிற் கிடைக்கும் காய்கறிகளை இலைக்கறிவகைகளை உண்டு உடல் வலுப்பெருது இறக்குமதிகளுக்கு ஏங்கி நிற்கும் நிலை மாறவேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிருேம்.

★ 300 நிறுவனங்கள், தொழில் அதிபர்கள்

# வங்கியில் பெற்ற 600 கோடி ரூபா கடனுதவி மீளளிக்கப்படவில்லை!

அரசு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

முந்நூறுக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களும், தொழில் அதிபர்களும் வங்கியிலிருந்து பெற்ற 600 கோடி ரூபாவுக்கும் கூடுதலான தொகை இதுவரையும் செலுத்தப்படாமலிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 12 மாதங்களுக்குள் மக்கள் வங்கி, இலங்கை வங்கி உட்பட அரசுக்குச் சொந்தமான ஏனைய வர்த்தக வங்கிகளிடமிருந்து இந்தக் கடன்கள் கடந்த 12 ஆண்டுகளுக்குள் பெறப்பட்டிருக்கின்றன,

பணத்தை ஒழுங்காக செலுத்தாதவர்கள் என்ற பட்டியலில் உள்ளவர்களுக்குக்கூட சில வங்கிகள் கடன் வழங்கியிருபபது தெரியவந்திருக்கிறது.

அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்திப் பல தொழில் அதிபர்கள் கடன் வசதிகளைப் பெற்றிருக்கிருர்கள். முன்னைய அரசாங்கம் வங்கிக் கடன்களை மீளப்பெறுவதற்கு வசதியாக விசேடசட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியபோதிலும் அதனை அமுல் செய்யவில்லை.

இந்த வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்தாதவர்களுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் சட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. (ரி)

★ தமிழகத்திற்கு

# யாழ். குடா எங்கும் வீதியோர மரநடுகை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் விறகுக்காக மரங்கள் தொடர்ந்தும் தறிக்கப்பட்டு வருவதால் எதிர்வரும் காலங்களில் எரிபொருள் பிரச்னையுடன் சூழல் பாதிக்கப்படும் அபாய நிலையையும் எதிர்நோக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகையால் தறிக்கப்படும் மரங்களுக்குப் பதிலாக மரமீள் நடுகையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் கடந்த நவம்பரில் வீதியோரங்களில் நடப்பட்ட மரங்களில் பட்ட மரங்களுக்கு பதிலாக வெற்றுப்பரல்களில் 04 அடி தொடக்கம் 05 அடி உயரமாக வளர்க்கப்பட்ட மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன. அதில் வடமராட்சிக் கோட்டத்தில் 485 மரக்கன்றுகளும், தென்மராட்சிக் கோட்டத்தில் 432 மரக்கன்றுகளும், வலிகாமம் கோட்டத்தில் 500 மரக்கன்றுகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன.

மேலும் புதிதாக தென்மராட்சிக் கோட்டத்தில் இத்தாவில் தொடக்கம் பளை வரையிலும் நூற்றுக்கு மேற்பட்ட கன்றுகளும், முனியப்பர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரி சந்தி வரை 125 கன்றுகளும், வல்லை ஆஸ்பத்திரி தொடக்கம் பருத்தித்துறை வீதியில் 150 கன்றுகளும், வல்வை ஆஸ்பத்திரியிலிருந்து உடுப்பிட்டி சந்தி வரை 125 கன்றுகளும் நடுகை செய்யப்பட்டுள்ளன. (சி)

## பலதும் பத்தும்

### எலும்பு – இச்சை

எலும்பை இச்சப்பட்டு விருமபி ஏற்கும் மரம் எலும்பிச்சை: அதாவது எலும்பில் உள்ள பொற்ருஸ் அதற்கு நல்ல வளமாக்கி!

இதனுல் தான் நாய் போன்றசிறிய விலங்குகளின் எலும்புகளை எலுமிச்சை, தோடை மரங்களுக்குச் சற்றுத் தொலைவில் புதைக்கிருர்ளாம்!

உலகிலேயேமுதல் பொஸ்பேற் வளமாக்கியும் எலும்புதான். கொழும்பு, காலி, மாத்தறை போன்ற சில மாவட்டங்களில் 1967ம் ஆண்டளவில் பாறை பொஸ்பேற்றுக்குப் பதில் மானிய விலையில் அரசு எலும்புப் பசளையை விற்றுவந்தது.

ஆடு மாடுகளின் எலும்பை வீணுக்காது பயன்படுத்த வேணடியது அவசியமல்லலவா?

–மயூரன்

# புதிய ஆளுநரை நியமிக்க ஜெயலலிதா கோரிக்கை

(சென்னை)

தமிழகத்துக்குப் புதிய ஆளுநர் ஒருவரை நியமிக்குமாறு மத்திய அரசிடம் தமிழக முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் புதுடில்லியில் செய்தியாளர் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்களைக் குறை கூறிய முதலமைச்சர், ஆளுநர் டாக்டர் சென்னுரெட்டியை உடன்டியாகத் திரும்ப அழைத்துக்கொண்டு வேருெருவரை ஆளுநராக நியமிக்கும்படி கேட்டுள்ளார்.

வேண்டுமென்றே ஆளுநர் தன்மீது அவதூறு சுமத்தியதாகவும் தமிழக முதல்வர் சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (ரி)

# பாடசாலை அதிபர்களுக்கு புலமைப் பரிசில்

[மானிப்பாய்]

மாணவர்களின் கல்வி வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு கல்வித் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சினுல் மேற்கொள்ளப்பட்டு வரும் இந் நடவடிக்கையின் முதற்கட்டமாக பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இதன் முன்னேடியாக 60 அதிபர்கள் தெரிவுசெய்யப்பட்டு வெளிநாட்டு புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேலும் யுத்தம் காரணமாக கல்வியைத் தொடர முடியாதவர்களுக்கு கல்விவள நிலயங்களை அமைத்து ஆசிரியர், மாணவர்களுக்கு கல்வி வசதிகள் செய்து கொடுக்கப் படவுள்ளது. 71-சி

# இராசி பலன்

19- 12 - 1994

திங்கட்கிழமை

(தமிழுக்கு மார்கழி 04)

பிரதமை முற்பகல் 9-41 வரை, திருவாதிரை மாலை 7-13 வரை. சித்தாமிர்தம், இராகுகாலம் காலை 7-53 முதல் 9-23 வரை, சுபவேளை நண் பகல் 12-23 முதல் 1-53 வரை.

மேடம்: சமாதானம் செய்தல், சுபச்செய்தி, பணவரவு

இடபம்: கௌரவப் பாதிப்பு. மனக்கவலை, அலைச்சல்.

மிதுனம்; கலைஞானம், ஊதியஉயர்வு, பயணம்.

கடகம்: உட்பூசல், நண்பர் கவலை, வேலைப்பழு.

சிங்கம்: குடும்பசுகம், சகோதர உதவி, அதிகாரிகள் பாராட்டு.

கன்னி: விவேகமான முடிவு, தொழில்லாபம், மகிழ்ச்சி.

துலாம்: வழித்தொல்லை, உடல் அசதி, வீண்பழி.

விருச்சிகம்: விரோதித்தல், தொழில் நஷ்டம், அகங்காரம்.

தனுசு; செல்வாக்கு, உறவினர் வருகை, சுயகுணம்.

மகரம்: கல்விலாபம், புதிய சந்திப்பு, வெளியார் உதவி.

கும்பம்: கருத்துமோதல், மனசுமை, அகால உணவு:

மீனம்: வீட்டில் துயர், விரோதிகள் பயம், அவமதிப்பு.

ஜோஸ்யர்

### மணிவாசகர் விழா

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஜெயவீரகத்தி விநாயகர் ஆலய மணிவாசகர் விழா நாளை 20ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ''திருவாசகத் தேன்'' என்னும் தலைப்பில் திரு. செல்லையா திருநாவுக்கரசு சொற்பொழிவு நிகழ்த்துவார். ரி

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994–12-19

திங்கள் இரவு

08-01 தளிர்கள்-சிறுவர்களுக்கான நிகழ்ச்சி.
08.20 தாயகப் பாடல்கள்
08-30 செய்திகள்
08-40 தரிசனம் - நிகழ்ச்சியில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களுடனை செவ்வி.
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1994-12-20

செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# நிவாரணப் பொருள்களின் விலைகள் குறைப்பு

(அரியாலை)

கடந்த செப்டம்பர் மாதக் கடைசி இருவார நிவாரணப் பொருட்களின் உண்மையான விலை அரிசிக்கு கிலோ 15 ரூபா, ஹைலன்ட் பால்மா 52 ரூபா 50 சதம் ஆனுல் கொழும்பிலிருந்து விலை விபரம் செயலக புனர்வாழ்வுப் பகுதிக்கு கிடைக்காததால் தான் பழைய விலையான அரிசி விலை ரூபா 18-40, ஹைலன்ட் பால்மா ரூபா 62.50 என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டு அந்த விலைக்கே பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. இவ் வேறுபாடு நுகர்வோரைப் பாதிக்காதவாறு திருத்தப்பட்டு அக்டோபர் மாத முதல் இருவாரங்களுக்குமுரிய நிவாரணப் பொருட்களில் குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை நிவாரணப் பொருட்களான மைசூர் பருப்பின் விலை கிலோ 25 ரூபாவிலிருந்து 24 ரூபாவாக புனர்வாழ்வுப் பகுதியால் குறைக்கப்பட்டது. அக்டோபர் மாத இருவாரங்களுக்கான நிவாரணப் பொருட்கள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதும் பலநோக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது. (59-ரி(

# 67,000 கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கடந்த ஐப்பசி மாதத்தில் மட்டும் யாழ். மாவட்டத்தில் 61,918 கோழிகளுக்கு கொள்ளை நோய் தடுப்பூசியும், 5,825 கோழிகளுக்கு அம்மை நோய்த் தடுப்பூசியும், 1463 மாடுகளுக்கு தொண்டை அடைப்பானுக்கான தடுப்பூசியும் போடப்பட்டுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து கிராமம்தோறும் தடுப்பூசி போடும் நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலமாகவே இது சாத்தியமாயிற்று என்பது குறிப்பிடத்தக்கது.

சகல கால்டை வளர்ப்பாளரையும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகத்துடன் தொடர்பு கொண்டு அல்லது கிட்டிய கால்நடை வைத்தியருடன் தொடர்கொண்டு தடுப்பூசிகளை போட்டு கால்நடைகளுக்கு நோய் வராமல் பாதுகாக்கும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது; -சி

★ புலிகள் ஊடுருவலாம்

# படையினரின் தேடுதலால் மலையகப் பகுதியில் பதற்றம்

(கொழும்பு)

மலையகத்தில் புலிகள் ஊடுருவிவிட்டதாக கூறி அப்பகுதிகளில் படையினர் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால் மலையகப் பகுதியில் பதற்றநிலை தோன்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தினுள் புலிகள் ஊடுருவி அங்குள்ள இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகள் வழங்கி அரசுக்கு எதிராக அவர்களை திசைதிருப்பி வருவதாக பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டு வருவதையடுத்தே தற்போது அப்பகுதிகளில் படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

கடந்த ஒரு மாதத்தில் மலையகப் பகுதியிலிருந்து புலிகளுடன் தொடர்புடையவர்களெனக் கூறி 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய தகவல் எதுவும் பின்னர் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையகம் குறித்து தென் பகுதியில் பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பாக பல வதந்திகளை பரப்பி வருவதாக பல மலையக அமைப்புகள் குற்றம்சாட்டியுள்ளன. -சி

# யாழ்தேவி ரயிலில் கொள்ளைச் சம்பவங்கள்

(கொழும்பு)

யாழ்தேவி புகையிரதத்தில் பயணம் செய்யும் தமிழ்ப் பயணிகளிடம் கொள்ளையடிக்கும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு வாரங்களில் மட்டும் 4 கொள்ளைச் சம்பவங்களில் மொத்தம் 1,08,000 ரூபா வரை கொள்ளையடிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 3ம் திகதி வியாங்கொடையிலும். 4ம் திகதி கொழும்பு கோட்டையிலும், பின்னர் பொல்காவலையிலும், மாகோவிலும் ரயில்நிலையங்களில் இக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளன. க-சி

# புறக்கோட்டை வியாபாரிகளே விலைக்கட்டுப்பாட்டை நிர்ணயிக்கிறார்கள்

(கொழும்பு)

உணவுப் பொருட்களின் விலைக் கட்டுப்பாட்டை, தற்போது கொழும்பு புறக்கோட்டையிலுள்ள 140 வர்த்தகர்களே தீர்மானிக்கின்றனர் என பொதுஜன ஐக்கிய முன்னணி எம். பி. திரு. மஹிபால ஹேரத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருட்களின் விலை உயர்வு தொடர்பாக அரசாங்கக் குழுக் கூட்டம் நடைபெற்றபோதே திரு. ஹேரத் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்;

இந்த வர்த்தகர்கள் தமக்குள் உடன்பாடு ஒன்றை மேற்கொண்டு, இவ்வாறு பொருட்களின் விலை அதிகரிப்பை மேற்கொண்டு வருகிறார்கள். இவர்களுக்கு உதவியாகக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தைச் சேர்ந்த சில அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக்கொண்டு செயற்பட்டு வருகிறார்கள். இவர்களை தொடர்ந்தும் பதவியில் வைத்திருப்பது முறைகேடுகளை ஏற்படுத்தும் என்றார். -சி

ரூபா 200 கோடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: இவ்வாண்டுக்கான பாதுகாப்புச் செலவு 2500 கோடி ரூபாவாகும். அடுத்த ஆண்டு இது 2700 கோடி ரூபாவாக உயரும்.

1992ம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு சதவீதமாக இருந்த பாதுகாப்பு வரி 1993 மேயில் 3 சதவீதமாகவும், 1994 ஜனவரியில் 3.5 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டது என்றார். ம-சி

வெள்ளை மாளிகை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கிளின்ரனை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் நடாத்தப்படவில்லையெனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை முன்னரும் அமெரிக்க அதிபர் மாளிகை மீது துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதும் மர்ம விமானம் ஒன்று வெள்ளை மாளிகை கட்டிடம் மீது மோதியதும் தெரிந்ததே. [க - சி]

சமாதான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பும் புலிகளும் எதிர்பார்க்கின்றனவாம்.

யுத்த நிறுத்தம், போக்குவரத்துபாதைதிறப்பு போன்ற விடயங்களில் அரசுடன் ஒத்துப்போக மறுத்துவரும் படையினர் இப்பேச்சுக்களை குழப்பி இராணுவத்தீர்வையே வற்புறுத்தமுயல்வார்கள் என்றும் பேச்சுக்கள் மூலம் ஏற்படும் தீர்வை படையினர் ஏற்கமாட்டார்கள் என கருதப்படுவதாகவும் அவதானிகள் கருதுகின்றனர்.

மேலும் ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்டால் பயணிகளை கட்டாயம் சோதனையிடுவேமென இராணுவத்தினர் தமது நிலைப்பாட்டை அரசுக்கு கூறியுமுள்ளனராம். (சி)

# காங்கிரஸில் களையெடுப்பு; பிரதமர் ராவ் நடவடிக்கை

(புதுடில்லி)

ஆளும் காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தும் முகமாக களையெடுப்பு நடவடிக்கையில் இறங்கப் போவதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மகாராஷ்டிராவில் அண்மையில் இடம்பெற்ற கட்சி உறுப்பினர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; தமது சொந்த நலன்களிற்காக காங்கிரஸ் கட்சியை பயன்படுத்த முற்படும் சந்தர்ப்பவாதிகள் உடனே கட்சியை விட்டு விலகிவிடவேண்டும். இவர்கள் கட்சிக்கு துரோகமிழைக்க முயல்கிறார்கள் எனவும் குற்றம் சாட்டினர்.

அண்மையில் மூன்று மாநிலங்களில் ஏற்பட்ட தோல்வியை அடுத்து திரு. நரசிம்மராவை கட்சித்தலைவர் பதவியிடிருந்து அகற்ற இவரது பரமவைரியான அமைச்சர் அர்ஜுன் சிங் வேறுசிலருடன் இணைந்து செயற்பட்டு வருவதும் தெரிந்ததே. (க - சி)

மேலும் 70

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வான யாழ். மாவட்டத்தை சேர்ந்த ஐந்து மாணவர்க்கு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதற்கான கடிதங்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அவர்களுக்கு அனுப்பியுள்ளது.

இவ்வாறு மருத்துவபீடத்திற்கு 70 பேர் தெரிவானதால் உயிரியல் விஞ்ஞான பிரிவில் ஏனைய பீடங்களுக்கும் 70 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. -சி

# நீதிமன்றில் ஹமில்டன் ஆஜர்

(கொழும்பு)

ஆட்கடத்தல் மற்றும் ஆட்கள் காணமல் போதல் தொடர்பான மனித உரிமை மீறல் வழக்கு ஒன்றில் சாட்சியமளிக்குமுகமாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உயர் நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டார்.

கடந்த 15ம்திகதி கொழும்பு உயர்நீதிமன்றில் இடம்பெற்ற இவ்வழக்கில் உயர்நீதிமன்றின் உத்தரவுப் படியே ஹமில்டன் ஆஜராக்கப்பட்டாராம்.

எதிர்வரும் பெப்ரவரிமாதம் 17ம் திகதிக்குமுன் இதுவிடயம் தொடர்பான அறிக்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளரால் உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவேண்டும்என இவ்வழக்கை விசாரணை செய்த நீதிபதியினால் உத்தரவிடப்பட்டுள்ளது. -க-சி

இரண்டாம் கட்ட

1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் சுகமாகாவிடில் அவருக்காக வேறொருவர் நியமிக்கம்படலாம் எனவும் பி. பி. ஸி. கூறியது.

இரண்டாம் கட்ட பேச்சுக்களை நத்தார் தினத்திற்கு முன் மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கிலும் யுத்த நிறுத்தம் போக்குவரத்து பாதைதிறப்பு பொருளாதாரத்தடை முற்றாக நீக்கம் மற்றும் புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான 'மல்லி'யின் கொலை குறித்து விசாரணை நடாத்துவது பற்றியும் இருதரப்பும் கடந்த இரு வாரங்களில் சில கடிதப் பரிமாற்றங்களை செய்திருந்தன.

இதன் அடிப்படையிலேயே 2ம் கட்டப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளது. இப்பேச்சுக்களிற்கான புதிய திகதி இன்று தீர்மானிக்கப்பட்டதும் இது குறித்து அரசு, புலிகளுக்கு அறிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. -சி-க

அரசு மக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒன்றுகூடி ஆராய்ந்து அதில் ஆராய்ந்த கருத்துக்களை அரசாங்கத்துக்கும, விடுதலைப் புலிகளுக்கும் தனித்தனியே அனுப்பிவைத்துள்ளன.

அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது: உத்தியோக மொழியான தமிழ் மொழி நாடு பூராவும் உடனடியாக அமுல்படுத்தப்படவேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் பொருட்டு ஓர் ஆணைக்குழு நியமிக்கப்படவேண்டும். இந்த ஆணைக்குழு மக்களைச் சந்தித்து, தமது சிபார்சுகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும். வடக்கு-கிழக்கில் படையினரால் கொல்லப்பட்ட அப்பாவி மக்கள் விடயத்தில் விசாரணை செய்து படையினரைத் தண்டிக்கவேண்டும். வடக்கு கிழக்கில் காணமற்போனவர்கள் சம்பந்தமாக ஒரு குறிப்புட்ட காலத்துக்குள் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் வண்ணம் காணமற்போனவர்கள் பற்றிய ஆணைக்குழு செயல்படவேண்டும்.

மக்கள் சுதந்திரமாக பயணம் செய்வற்கு போக்குவராதுப்பாதை திறக்கப்படவேண்டும். உணவு மற்றும் அத்தியத்வசியப் பொருட்கள் வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல்ாவண்டும். யுத்தத்தினல்பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் தொடர்ந்து வழங்கவேண்டும். யுத்தம் நடைபெறும் இடங்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்காணிப்பதற்கு குழு ஒன்று ஏற்படுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட யுத்த பிரதேசங்களை புனரமைக்க வேண்டும்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களை விடுவிப்பதோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவேண்டும். -ம-சி

அரசியல் பழிவாங்கல்:

# தொழில் வழங்கலில் முன்னுரிமை வழங்கப்படும்

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தினல் அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டமையால் தொழிலை இழந்தவர்களுக்கு தொழில்கள் வழங்கப்படுவதில் முன்னுரிமை அளிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டவர்களின் தொழிற்சங்க மகாநாட்டினிலேயே அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ம-சி

அமெரிக்க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுபரிசீலனை செய்யவிருப்பது குறித்தும் இந்த அதிகாரி திருமதி சந்திரிகாவுடன் முக்கிய பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

இதன்போது இந்த ஒப்பந்தம் மறுபரிசீலனை செய்யப்படுமானல் அதனல் இலங்கை அரசு எதிர்நோக்கவேண்டிவரும் விளைவுகள் குறித்தும் அந்த அதிகாரி ஜனதிபதியிடம் தெரிவித்துள்ளாரம். -சி

தற்கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் உளவுப் பிரிவின் தலைவர் ஒருவரை இராணுவம் சுட்டுக்கொன்று, அவரது சடலத்தை இழிவான முறையில் நடத்தியதற்குப் பழிவாங்கும் நோக்கில் இக்கொலையை நடாத்த புலிகள் திட்டமிட்டிருந்தனர் என்றும், இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா தமது வீட்டிலிருந்து இராணுவ அலுவலகத்துக்குச் செல்லும்போது, தமது வாகனத்தை வெடிகுண்டுடன் ஓட்டிவந்து அவரது வாகனம் மீது மோதி அவரைக் கொலை செய்ய விடுதலைப் புலிப் போராளி ஒருவர் திட்டமிட்டிருந்தாராம்.

ஆனல் இராணுவத் தளபதி கடைசி நேரத்தில் தமது பாதையை மாற்றி வேறு வழியாகச் சென்றதனல் இக்கொலை முயற்சி தடுக்கப்பட்டது என்றும் 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளதாக 'வெரித்தாஸ் மேலும் தெரிவித்தது. ம-சி

# கல்வி அபிவிருத்திக்கு சுவீடன் ரூ. 94 கோடி உதவி

(கொழும்பு)

இலங்கையில் கல்வி அபிவிருத்திக்காக சுவீடன் அரசாங்கம் 93 கோடியே 60 லட்சம் ரூபாவை உதவியாகவழங்கவுள்ளது.

ஐந்துவருட காலத்தில் இந்த நிதி செலவிடப்பட இருக்கின்றது என்றும் வசதி குறைந்த பாடசாலைகளில் ஆரம்பக் கல்வியை தரமுயர்த்துவதற்கு இந்த நிதி செலவிடப்படவுள்ளது என்றும் அறியப்படுகின்றது.

சுவீடன் தூதரக பொறுப்பதிகாரியும், திறைசேரிப் பிரதிச் செயலாளர் லியனகேயும் இதற்கான ஒப்பந்தப் பத்திரத்தில் அண்மையில் கைச்சாத்திட்டனர். (ம-சி)

இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஆடைகளை கொள்வனவு செய்வது குறித்தும் இலங்கையில் உள்ள தனது ஆடைத்தொழிற்சாலைகள் குறித்தும் மறுபரிசிலனை செய்யப்போவதாகவும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த அச்சுறுத்தல்களால் பொ. ச. மு. அரசு பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post OfficeSri uLanka nder Licence Number B/16336/B-